ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2249/15 - 2021 ඔක්තෝබර් මස 13 වැනි බදාදා - 2021.10.13

2249/15 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பி. 3/92* (III)

### 1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டம்

*1992 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, சுரங்கங்கள் மற்றும் கனிப்பொருட்கள் சட்டத்தின் 34 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 64 ஆம் பிரிவின்கீழ் சுற்றாடல் அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.*

சுற்றாடல் அமைச்சர்.

கொழும்பு,
2021, செத்தெம்பர் 28.

**ஒழுங்குவிதிகள்**

காலத்திற்குக்காலம் திருத்தப்பட்டவாறாக 1993, நவெம்பர் 26 ஆந் திகதிய 794/23 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட, 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சுரங்கத்தொழில் (உரிமமளித்தல்) ஒழுங்குவிதிகள் பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன:

(1) மூன்றாம் ஒழுங்குவிதியின் (6) ஆம் பந்தியில் "ஓர் ஆண்டிற்கு மேற்படாமல் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "ஆகக்குறைந்தது ஓராண்டிற்கும் கனிப்பொருட்களின் ஒதுக்குகளின் கிடைப்பனவு மீது அடிப்படையாகக் கொண்டு ஆகக்கூடியது மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன்" என்ற சொல்லை இடுவதன் மூலமும் ; அத்துடன்

1A - PG 5574 — 1020 (2021/10)

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

(2) ஐந்தாம் ஒழுங்குவிதியின் (3) (ஆ) என்னும் பந்தியில் "ஓராண்டிற்கு மேற்படாத காலப்பகுதியொன்றுக்கு செல்லுபடியானதாதல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆகக் குறைந்தது ஓராண்டிற்கு காலப்பகுதியொன்றிற்கும் கனிப்பொருட்களின் கிடைப்பனவின் மீது அடிப்படையாகக்கொண்டு ஆகக்கூடியது மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்குச் செல்லுபடியானதாதல் வேண்டும்." என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

*10-404*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.